**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No. 368/2015</u>**

**<u>நாள்.26.02.2026</u>**

**<u>பி.வா.சா. 1</u>- முருகன்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன தொழில் பார்க்கிறேன் என்றால் விவசாயம். நான் நில புரோக்கராகவும் இருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு மேற்கு மற்றும் கிழக்கில் 2 வீடுகள் உண்டு என்றால் சரிதான். வேலுவுக்கும் மேற்கு மற்றும் கிழக்கில் 2 வீடுகள் உண்டு என்றால் சரிதான். எங்கள் வீடுகள் இருக்கக்கூடிய கிராமம் பெரியகோவிலான்குளம் கிராமம் என்றால் சரிதான். எனது அப்பா பெரியான் என்ற பெரியசாமிக்கு பூர்வீக வீடுகள் கிடையாது என்றால் சரிதான். எனது தகப்பனார் உடன்பிறந்தவர்கள் சுப்பிரமணியன், மாடன், கருப்பன், பாலன். எனது தகப்பனார் மற்றும் உடன்பிறந்தவர்கள் சுப்பிரமணியன், மாடன், கருப்பன், பாலன் ஆகியோர்களின் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் புல எண் 7 ல் இருந்தது என்றால் சரியல்ல. புல எண்.7 ல் பாழடைந்த இடி கிணறு இருந்தது என்றால் கிணறு கிடையாது. புல எண்.7 ல் ஒரு பகுதி எனது தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து அதில் வந்த வருமானத்தை வைத்து தான் புல எண் 8 மற்றும் 9 சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்குப் பாத்தியப்பட்ட மேற்கில் உள்ள வீட்டின் கதவு எண்.82 என்றால் சரிதான். எனக்குப் பாத்தியப்பட்ட மேற்கில் உள்ள வீடு புல எண்.142 ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்.142 ல் எனது சகோதரர்களுக்கு தனித்தனியாக வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.144 என்பது ஊரின் கீழ்புறத்தில் நானும், எனது சகோதரர்களும் வீடு கட்டியுள்ள இடம் என்றால் சரிதான். புல எண்.142 மற்றும் 144 ல் தனித்தனியாக வீடுகள் கட்டப்பட்டு தனித்தனி அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். எனக்குப் பாத்தியப்பட்ட மேற்கில் உள்ள வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் 1992. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு. எனது உடன்பிறந்தவர்களும் 4, 5 துவக்கப்பள்ளி வகுப்புகள் தான் படித்துள்ளார்கள் என்றால் சரிதான்.

எனது எதிர்வழக்குரையில் எங்கள் குடும்பத்தில் 1985 ல் வாய்மொழி பாகம் நடைபெற்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். புல எண்.7, 8, 9 ல் உள்ள சொத்துக்கள் ஒரே நேரத்தில் பிரிக்கப்பட்டவை என்றால் சரிதான். நானும் எனது சகோதரர்களும் 1994 ல் புல எண்.7/2 ல் சொத்துக்கள் சேர்ந்து வாங்கினோம் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் சொல்லியவாறு எங்கள் குடும்பத்தில் 1985 ல் வாய்மொழி பாகம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்தபிறகு, நானும் எனது சகோதரர்களும் ஒன்றாக அனுபவித்து வந்து 2000 ல் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. புல எண்.8, 9 ல் தனித்தனியாக 2 கிணறுகள் உள்ளது அவை எங்கள் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்டவை என்றால் சரிதான். எங்கள் குடும்ப சொத்தான புல எண்.9 ல் ஒரு பகுதியை எங்கள் சகோதரி கருப்பாயிக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல சகோதரி கருப்பாயியின் மகன் முத்துவுக்கு தான் கொடுத்துள்ளோம். அதை நானும் வேலுவும் திரும்ப வாங்கிவிட்டோம் என்றால் சரிதான். நானும் எனது சகோதரர்களும் சிறு வயது முதலே விவசாயத்தில் ஈடுபட்டு வந்தோம் என்றால் சரிதான். நான் தான் எனது அப்பாவுடன் சேர்ந்து குடும்பத்தின் வரவு செலவுகளை பார்த்து வந்தேனா என்றால் என் அப்பாவிற்கு வயதாகியதால் நான் பார்த்துக்கொண்டேன். எனது கட்சிபடி, எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். எனது தகப்பனார் இறப்பின்போது அவர் வாங்கிய பத்திரங்கள், வருவாய் ஆவணங்கள் என் கைவசம் இருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறக்கும்வரை, அவருடைய சொத்துக்கள் சம்பந்தமாக யாரும் எந்த ஆவணங்களோ, விண்ணப்பங்களோ அவரைத் தவிர வேறு யாரும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது, புல எண்.8 ல் இலவச மின்சாரம் கேட்டு 1989 ல் விண்ணப்பம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல புல எண்.9 ல் தான் மின்சாரம் வாங்கப்பட்டது. புல எண்.8 ல் உள்ள கிணறு குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

என் அப்பா உயிருடன் இருக்கும்வரை எனக்கு எந்த தனிப்பட்ட உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல என் அப்பா 1985 ல் இறப்பதற்கு முன்பாக எங்களுக்கு சொத்தில் உரிமையை கொடுத்துவிட்டார். என் அப்பா 1985 ல் இறப்பதற்கு முன்பாக எங்களுக்கு சொத்தில் உரிமையை பிரித்துக்கொடுத்ததற்கு எந்த ஆவணங்கள் உள்ளது என்றால் ஆவணங்கள் கிடையாது. என் அப்பா 1985 ல் இறப்பதற்கு முன்பாக எங்களுக்கு சொத்தில் உரிமையை பிரித்துக்கொடுத்தார் அதன் தேதி என்ன யார் முன்னிலையில் பிரித்துக்கொடுத்தார் என எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் எந்த சொத்துக்களைப் பொறுத்து கேட்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த வழக்கினுடைய சங்கதிகளை நான் படித்து பார்த்தது இல்லை என்றால் படித்துப் பார்த்துள்ளேன். புல எண்.9 சம்பந்தமாக என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது எதிர்வழக்குரையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என படித்து பார்த்தது இல்லை என்றால் படித்துப் பார்க்கவில்லை. நான் சொல்வதுபோல், 1985 ல் வாய்மொழி பாகம் நடைபெறவில்லை, அப்படி நடந்திருக்கவும் வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யாக கட்சி செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.9 சான்றிதழ் மற்றும் பி.வா.சா.ஆ.10 ஆவணங்கள், பி.வா.சா.ஆ.7 ஆன என்னால் எனது மகனுக்கு பிறப்பிக்கப்பட்ட ஏற்பாட்டு ஆவணத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மின் இணைப்பு விண்ணப்பம் செய்து வாங்கியபோது எனது சகோதரர்களிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் வேலு பி.வா.சா.2 மூலமாக அவரது மகன் சரவணனுக்கு ஏற்பாடு ஆவணத்தை பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நானும், எனது சகோதரர் வேலு பிறப்பித்த பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஏற்பாடு ஆவணங்களில் எங்களது சகோதரர்களுக்குள் பிரிவினை செய்த சொத்துக்கள் விபரப்படி, எல்கைகள் காண்பித்துள்ளோம் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 என்னால் மின்சார வாரியத்தில் விண்ணப்பித்த விண்ணப்பம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 விண்ணப்பம் புல எண் 8 ல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு கேட்டு கொடுக்கப்பட்ட விண்ணப்பம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் 4 வது காலத்தில் எனது உடன்பிறந்தவர்களாக பங்காளிகள் பற்றிய விபரம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் பின்பக்கத்தில் எனது உடன்பிறந்தவர்கள் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் கையெழுத்து செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த கையொப்பம் நான் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ன் அடிப்படையில் நான் மின் இணைப்பு எனது பெயரில் வாங்கவில்லை என்றால் சரியல்ல மின் இணைப்பு வாங்கியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என ஒப்புக்கொண்டு தான் கையொப்பம் போட்டு மின் இணைப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் புல எண்.8 எனக்கும் பங்குதாரர்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என ஒப்புக்கொண்டு தான் மின் இணைப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் எனக்குரியது என்ற வார்த்தை அடித்து, எழுதப்பட்டுள்ளது என்றால் அடித்து எழுதப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 என்னால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல விண்ணப்பம் நான் தான் கொடுத்தேன் விண்ணப்பத்தினுடைய 2 வது பக்கம் என்னால் தாக்கல் செய்யப்பட்டது அல்ல. எனக்கு மின் இணைப்பு வாங்கும்போது சொத்து யார் பெயரில் உள்ளது என்ற விபரத்தை தெரிவித்து கிராம நிர்வாக அலுவலரிடம் சான்றொப்பம் பெற வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு 1வது தபசில் சொத்தில் உள்ள மின் இணைப்பின் பங்கு உரிமையை மறுப்பதற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 விண்ணப்பத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 விண்ணப்பத்தின் அடிப்படையில் 2005 ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 2005 ல் புதிதாக விண்ணப்பம் என்னிடம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் 2-1/2 ஏக்கர் இடத்தில் 3 H.P. மோட்டார் வைப்பதற்காக என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் இணைக்கப்பட்ட VAO சான்றிதழ் என்னால் VAO விடம் சான்று வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த VAO சான்றிதழில் சொத்து யார் யாருக்கு பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் பெரியசாமி மக்கள் 5 பேரைக் காட்டி அதில் யாருக்கு பாத்தியப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் பட்டா எண் 718 ல் உள்ள புல எண்.8 ல் 1.22.0 ஏர்ஸ் நிலம் உள்ளது என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.26 17:47:39 +0530